உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர்-13 யூலை 2009 இதழ்-12

$1.00




தம்பெருமான் கொடுத்தமொழி முதலாமத் தமிழ்மாலைச்
செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்
உம்பர்பிரான் தானருளும் உணர்வுபெற உலகேத்த
எம்பெருமான் வன்றொண்டர் பாடிஅவர் எதிர்பணிந்தார்.

– சேக்கிழார்

# DR. ILLANGO & ASSOCIATES

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)




**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

## Dr. M. Illango

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

## Dr. S. Raveendran

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

## Dr. Janaki Illango

B. D. S. Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


### அன்புநெறி சந்தா விபரம்

**தனிப்பிரதி $1.00, வருடச் சந்தா (12 இதழ்கள்) $10.00.**
(நேரில் பெறுவோருக்கு)

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| **கனடா:** | Can. $ 25.00 |
| **அமெரிக்கா:** | Can. $ 30.00 |
| **ஏனைய நாடுகள்:** | Can. $ 40.00 |

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada
(Tel.: 905-566-4822)

உ
சிவ சிவ

# அன்புநெறி

| மலர் - 13 | விரோதி ஆனி - ஆடி யூலை 2009<br>திருவள்ளுவர் ஆண்டு - 2040 | இதழ் - 12 |
|---|---|---|


**பொருளடக்கம்** **பக்கம்**

1. சுந்தரர் வழங்கிய திருத்தொண்டத்தொகை. 4
2. நம்பியாரூரர் . . . . 6
3. தமிழ்ஞானசம்பந்தர் . . . 9
4. வயதிலாவயதினர் வாழியவே!. . . 14
5. நல்லொழுக்கம் . . . . 15
6. பொருள்வாசகம் . . . . 18
7. திருவள்ளுவர் வரலாறும் திருக்குறளும் 21
8. சிவஞானபாடியத்துள் திருவாசகச் சிந்தனைகள் 24
9. மன்றத்தில் நிகழ்ந்தவை. . . 27

**சிறுவர் பகுதி**

10. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை -2 28
11. சைவபோதம் . . . . 29

**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா



**விபுலானந்த அடிகள்**
**நினைவு நாள்:** 19-07-2009

வெள்ளை நிற மல்லிகையோ வேறெந்த மாமலரோ
வள்ளல் அடியிணைக்கு வாய்த்த மலர் எதுவோ
வெள்ளை நிறப்பூவுமல்ல வேறெந்த மலருமல்ல
உள்ளக் கமலமடி உத்தமனார் வேண்டுவது.

**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
Saiva Sidhdhantha Manram, Canada 1008-50 Elm Dr. E.,
Mississauga, ON L5A 3X2 Canada Fax/Tel (905) 566-4822
Email:- saivamanram@gmail.com

# சுந்தரர் வழங்கிய திருத்தொண்டத்தொகை

சுந்தரர் திருவாரூரில் பரவையாருடன் இல்லறம் நடத்தி வந்தார். சுந்தரர் வழக்கம்போலத் திருவாரூர்த் திருக்கோயிலுக்குச் சென்றார். அங்கு தேவாசிரிய மண்டபத்திலே சிவனடியார்கள் எண்ணிலோர் கூடியிருந்தார்கள். “இவர்களுக்கு நான் அடியவனாகும் நாள் எந்நாளோ!” என்று எண்ணிக் கொண்டே திருக்கோவிலுள் புகுந்தார்.

அப்போது இறைவன் “வன்தொண்டனே! இங்குள்ள அடியார்களின் மாண்பு அளவிடற் கரியது. இவர்களுக்கு நிகரானவர் எவருமிலர்; அன்பினாலே இன்பத்தை அடையும் பெருந் தகையாளர்கள்; இவர்களை நீ தீந்தமிழாற் பாடி வழிபடவேண்டும்” என்றார். சுந்தரர் கைகுவித்த வண்ணம் வணங்கி “எம்பெருமானே! அடியார்களின் வரலாறு இன்னதென்றும் அவர்களுடைய தன்மை எப்படிப் பட்டதென்றும் அறியாதவனாகிய நான் எவ்வாறு அவர்களை ஏத்திப் பாடுவேன்! அவர்களை நான் புகழ்ந்து பாமாலை பாடும் இயல்பை அடியேனுக்குத் தந்தருளும்” என்றார். இறைவன் அடியார்களின் வரலாற்றை அவர் உள்ளத்தே தோற்றுவித்து “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என அடியும் எடுத்துக் கொடுத்தருளினார். அவருடைய திருவடிகளில் வன்தொண்டர் வணங்கித் திருவருளை மேற் கொள்ளும் போது தியாகராசப் பெருமான் மறைந்தார்.

அதன்பிறகு நம்பியாரூரர் சிவனடியார்களின் திருக்கூட்டம் நிறைந்துள்ள தேவாசிரிய மண்டபத்திற்குச் சென்றார். அவர்களைத் தாழ்ந்து வணங்கி, என்றென்றும் சிவநெறியில் நிலைபெற்ற அவ்வீரர்கள் ஒவ்வொருவர் திருப்பெயரையும் சொல்லி இவர்க்கடியேன் என்று தொடங்கும் திருத்தொண்டத்தொகை திருப்பதிகத்தை ஆர்வத்தோடு பாடினார். ஆண்டவன் அடியெடுத்துக் கொடுத்த “தில்லைவாழ் அந்தணர்தம் அடியார்க்கும் அடியேன்” என்பதை முதலடியாகக் கொண்டு இறைவன் திருவருட் துணையினால் உணர்வு பெற்று திருத்தொண்டத் தொகை என்னும் திருப்பதிகத்தை வன்தொண்டர் உலகம் புகழப் பாடிச் சிவனடியார்களின் எதிரே வணங்கி நின்றார். சிவனடியார்கள்

பெருமகிழ்ச்சி அடைந்தார்கள். நம்பியாரூரர் அத்திருக்கூட்டத்தின் நடுவே சென்றணைந்தார்.

நம்பியாரூரரான சுந்தரமூர்த்தி நாயனார் திருத்தொண்டத் தொகையைப் பாடியருளிவிட்டுத் திருவாரூர் தியாகேசப் பெருமானைத் திரிகாலங்களிலும் மனமுருகி அன்போடு வணங்கிப் பிரியாமல் திருவாரூரிலே வாழ்ந்து வந்தார்.

சுந்தரர் பாடிய திருத்தொண்டத் தொகைதான் சேக்கிழார் பெருமான் பாடியருளிய பெரியபுராணம் (திருத்தொண்டர் புராணம்) என்னும் சைவப் பெருங்காப்பியத்திற்கு முதல் நூலாக விளங்கியதாகும். சுந்தரர் இயற்றிய திருத்தொண்டத்தொகை கிடைக்கவில்லை என்றால் சிவனடியார்களின் வரலாறு கிடைத்திருக்காது. மாதவச் சிவஞான முனிவர் "பெருமணச் சீர் திருத்தொண்டத்தொகை விரித்த பேரருளின் பெருமாள்" என்கிறார். தெய்வச் சேக்கிழார் "மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத் தீது இலாத் திருத்தொண்டத்தொகை தர, தென்தமிழ் புவிமீது சிவபெருமான் தன் அணுக்கத் தொண்டரை நம்பியாரூரராகத் தோன்றச் செய்தார்" என்கிறார். திருத்தொண்டத் தொகையினை அருளிச் செய்தவர் என்பதொரு காரணமே, நம்பியாரூரர் நாம் தொழும் தன்மையாளர் என்று நம்மனோர் உணர்ந்து கொண்டு, வணங்கி உய்தற்குச் சாலும்,

நேசம் நிறைந்த உள்ளத்தால் நீலம் நிறைந்த மணிகண்டத்து
ஈசன் அடியார் பெருமையினை எல்லா உலகும் தொழஎடுத்துத்
தேசம் உய்யத் திருத்தொண்டத் தொகைமுன் பணித்த திருவாளன்
வாச மலர்மென் கழல் வணங்க வந்த பிறப்பை வணங்குவாம்.

எனச் சேக்கிழார் எடுத்தியம்புகிறார்.

**ஆசிரியர் தி. வி.**

பத்தராய்ப் பணிவார்கள் எல்லார்க்கும் அடியேன்
பரமனையே பாடுவார் அடியார்க்கும் அடியேன்
சித்தத்தைச் சிவன்பாலே வைத்தார்க்கும் அடியேன்
திருவாரூர்ப் பிறந்தார்கள் எல்லார்க்கும் அடியேன்
முப்போதுந் திருமேனி தீண்டுவார்க்கு அடியேன்
முழுநீறு பூசிய முனிவர்க்கும் அடியேன்
அப்பாலும் அடிசார்ந்த அடியார்க்கும் அடியேன்
ஆரூரன் ஆரூரில் அம்மானுக் காளே.

– சுந்தரர்

# நம்பியாரூரர்

(திருமுறைமணி புலவர் எ. வேலாயுதன்)

திருமுறைகளின் வரிசையில் ஏழாந்திருமுறை அருளிய நம்பியாரூரர், சம்பந்தர் அப்பர் ஆகிய இருவர் காலத்திற்கு இருநூறு ஆண்டுகட்குப்பின் தோன்றியவர் என்று வரலாறுகள் குறிப்பிடுகின்றன. நம்பியாரூரர்

மாதொருபாகனார்க்கு வழிவழியடிமை செய்யும்
வேதியர்குலத்தில் தோன்றி மேம்படு சடையனாருக்கு
ஏதமில்கற்பின் வாழ்க்கை மனையிசை ஞானியார்பால்
தீதகன்றுலகமுய்யத் திரு அவதாரம் செய்தார். (தடுத்தாட். புரா)

என்கின்றார் சேக்கிழார். சிவபூசனை புரியும் வழி, வழி அடிமை பூண்ட தமிழ் மரபின் ஆதிசைவராகிய சிவவேதியர் குலத்தில தோன்றிய நம்பியாரூரர் நரசிங்க முனையரையர் என்னும் நாடுவாழ் அரசர்க்கு அன்பு மகனாராகி வளர்ந்து கொற்றவர் (அரசர்) திருவுக்கேற்ப நாள்குறித்துத் திருமணம்புரிய முற்பட்டபோது, அருள்துறை இறைவன் தனக்கு வழி வழித்தொண்டன் நீ என்று ஆவணங்காட்டி தடுத்தாட்கொள்ளப் பெற்ற அற்புதச் செய்தியால் பிள்ளையாரும் அப்பரும் அருளி, மறுமலர்ச்சி பெற்ற பூசனைத் திருநெறியிலும் அரச வாழ்வு மேன்மையாக முதன்மைத் திருத்தொண்டு பூண்ட ஆதிசைவப் பெருமக்களாலேயே கொள்ளப் பெற்றதோ? ஏன்றே எண்ணத் தோணுகின்றது.

அண்டர் வாழ்வும் அமரர் இருக்கையும்
குண்டு வீற்றிருக்குங் கருத்தொன்றிலோம்
வண்டு சேர்மயிலாடு துறையரன்
தொண்டர் பாதங்கள் சூடித்துதையிலே! (மயிலாடுதுறைப் பதிகம்)

என்னும் அப்பர் கருத்து, இருநூறு ஆண்டுகளில் உலகியல் தாக்கத்தினால் அடியார்களிடத்தும் மறந்து போயிற்றோ! என்றுந் தோன்றுகின்றது.

பின்னர் உலகியல்பும் அரசியல்பும் உறுதியல்ல என்றுணர் சேரமான் பெருமாளின் தோழராகிய நம்பியாரூரர் ஆரூர் இறையருளால், அடியார்கடியாராய்த் திருத்தொண்டத்தொகை அருளிய பேரருள், சிவபெருமான் நம்பியாரூரரை ஆட்கொண்டருளியது மட்டுமன்று உலகம் உய்யவும் சைவம் நின்றோங்கவும் புரிந்த திருவருளே எனவும், எனவே இற்றைக்கும்

மற்று எற்றைக்கும் பூசனைத் திருநெறி தழைக்க இறையருள் புரியவேண்டும். புரிய நாம் போற்றுதலே வேண்டும் எனவும் தெரிகின்றது காணலாம்.

இங்ஙனம் தடுத்தாட்கொண்டருளப் பெற்ற நம்பியாரூரர் இறைவனை அத்தா உனக்காளாகினேன், இனியும் அல்லேன் எனலாமே? அல்லேன் எனல் கூடாது என்னுங் குறிப்பினுடன் சிவவேதியர் குலத்தில் தோன்றியும் பலநாள் இறைவன் நினைப்பின்றி அரச போகத்தில் பேயாய்த்திரிந்து எய்த்தமையும், இப்போது ஆட்கொள்ளப் பெற்றதையும் இதனால் தெரியும் இறைவன் திருவருட் பெருமையும் போற்றியே திருப்பதிகங்கள் பலவற்றினும் குறிப்பிடுகின்றார். இத்தன்மையால்

பாதம் பணிவார்கள் பெறும் பண்டம்மது பணியாய்
ஆதன் பொருள் ஆனேன் அறிவில்லேன் அருளாளா!
( வெண்ணெய் நல்லூர்ப் பதிகம்)

என்று பாதம் பணியும் பூசனையை வேண்டுகின்றார்.

கரும்பார்விண்ட மலர் அவைதூவித் தூங்குகண்ணீர்
**அரும்பா நிற்குமனத் தடியாரொடும் அன்பு செய்வன்**
விரும்பேன் உன்னையல்லால் ஒரு ஒருதெய்வம் என் மனத்தால்
கரும்பாருங்கழனிக் கழிப்பாலை மேயவனே! என்றும்

**பண்ணாரிசைகள் அவைகொண்டு பலரும் ஏத்தும் பழையனூர் அண்ணா**
ஆலங்காடா . . .
பன்மாமலர்கள் அவை கொண்டு பலரும் ஏத்தும் பழையனூர்
அம்மா ஆலங்காடா . . . வுன் அடியார்க்கடியேன் ஆவேனே!.

என்றும் பூசனைபுரி அடியாரொடுங் கூடி அன்பு செய்து இத்திருநெறியின் அடியார்க்கடியேன் ஆமாறு அருள் புரிய வேண்டுகின்றார்.

முடிவில் நொடித்தான்மலை செல்லும் போதும் இளமைக் காலத்தே பூசனையை விட்டு விட்டு அரச போகத்தில் சென்ற இழிவையே நினைந்து கழிவிரக்கம் உடையராய்,

அஞ்சினையொன்றி நின்று அவர் கொண்டடி சேர்வறியா
வஞ்சனையென் மனமே! வைகிவான நன்னாடர் முன்னே!
துஞ்சுதல் மாற்றுவித்துத் தொண்டனேன் பரமல்லதொரு
வெஞ்சின ஆனைதந்தான் நொடித்தான் மலையுத்தமனே!

என்று நினைந்துருகிப் பாடிக்கொண்டு செல்கின்றார். இதனுள் மலர் கொண்டு திருவடியைப் பூசனைப் புரிந்து சேரும் திருநெறியினால் பொறிவாயில் ஐந்தும் அவித்து திருவடியில் ஒன்றி நிற்றலும் மனம் அன்பினால் மாசற்றிருத்தலும் கூடும் என்று எதிர்மறை முறையில் தெளிய உணர்த்துகின்றார். இங்ஙனமே

முன்னமே உன் சேவடி சேரா மூர்க்கனாகிக் கழிந்தன காலம்
இன்னம் என்றனக்குய் வகையருளாய் இடைமருதுறை எந்தைபிரானே

என்று பூசனை புரியாது போயின காலத்திற்காக இரங்கி வருந்துகின்றார். மற்றும்

குடம் எடுத்து நீரும் பூவும் கொண்டு தொண்டர் ஏவல்செய்ய
நடம் எடுத்தொன்றாடிப்பாடி நல்குவீர் நீர் புல்குவண்ணம் (1)

என்றும்,

தடங்கையால் மலர் தூய்த் தொழுவாரைத்
தன்னடிக்கே செல்லுமாறு வல்லானை (2) (திருவாழிகொளிபுத்)

என்றும்

பொய்யா நாவதனால் புகழ்வார்கள் மனத்தினுள்ளே,
மெய்யே நின்றெரியும் விள்ககேயொத்த தேவர் பிரான் (3)

என்றும்

மழுவாள் வலனேந்தி மறையோதி மங்கை பங்கா
தொழுவாரவர் துயராயின தீர்த்தல் உனதொழிலே (4)

என்றும்

காலையெழுந்து தொழுவார்தங்கள்
கவலை களவாய் கறைக்கண்டா, என்றும் (5)

நீரும் பூவும் கொண்டு தொண்டர் பணி செய்தல்; மலர்க்கரங்களால் மலர் தூவித் தொழுதல்; அன்பு மனத்துடன் நாவினால் இறைவன் பொருள்சேர் புகழ் பரவுதல், காலையே நினைந்தெழுதல்; தொழுதல், ஆகிய பூசனைத் திறங்களுக்கு முறையே

1. இறையருள் அணைதல்
2. திருவடிப்பேறு
3. உள்ளுணர்வின் ஒளி பெருகுதல்
4. பிறவித்துயர் தீர்தல்
5. அல்லல் களைதல்

என்று அருள்புரி நலன்களைத் தெளிய உரைக்கின்றார்.

தொடரும்

சென்ற இதழ் தொடர்ச்சி......

# "தமிழ்ஞான சம்பந்தர்"



(செந்தமிழ் வேந்தர், சித்தாந்த வித்தகர்
திரு. ந. ரா. முருகவேள், M.A., M.O.L.)

## மூல இலக்கியம்

சங்க காலத்தில், சங்ககாலப் புலவர்களால், சங்க இலக்கியங்களால் தமிழ் வளர்ந்திருந்தது. ஆயினும் அதற்கு இடைக்காலத்தில் களப்பிரர் பல்லவர் முதலிய வேற்றுவரால் நிகழ்ந்த கேடுகளைப் போக்கி, இசைநலம் சான்ற–ஒப்புயர்வற்ற–தெய்வத்திருவருள் செறிந்த–அளவிலா ஆற்றலும் உணர்ச்சியும் அழகுற அமைந்த–அரிய இனிய புனிதம் மிக்க–பல்லாயிரக்கணக்கான கவிதைகளால், தமிழ்மொழியை வளர்த்தருளிய தலையாய சான்றோர், நம் திருஞானசம்பந்தரே என்பதில் ஐயமில்லை. அவர்தம் கவிதைகள், தமது இனிய தெய்விக இசைநலனால் எத்துணையோ பல நூற்றாண்டுகளாக எண்ணில்லாத கோடிக்கணக்கான மக்களின் உள்ளங்களையெல்லாம் கொள்ளை கொண்டு, இன்புபுறுத்திப் பண்படுத்தி வருகின்றன. அப்பெருந்தகையார் அருளிச் செய்த அழகிய திருப்பாடல்களால், எத்தனையோ பல பெருந்தலங்களும், அத்தலங்களில் விண்ணளாவ உயர்ந்து ஓங்கி எழிற் கோபுரங்களைக் கொண்ட எண்ணில்லாத பல கோயில்களும், இயன்றளவு அழியாப் பெரும் சிறப்பும் புகழும் அமையப்பெற்று வளர்ந்தோங்கி விளங்கி வருகின்றன. அவற்றால் நம் தமிழகத்திற்கு விளைந்துள்ள நலங்களுக்கு அளவேயில்லை.

திருஞானசம்பந்தர், "சங்கமலி செந்தமிழ்" என்று புகழ்ந்து, சங்ககாலத் தமிழ்க் கவிதைகளைப் பெரிதும் போற்றியவராயினும், அவற்றிலும் புதுமைமிக்க அழகிய கவிதைகளை அருளிச் செய்தவர். அவர்தம் பாடல்களிற் பயின்றுள்ள சொல் புதிது. பொருள் புதிது. சுவை புதிது. அவர்தம் பாடல்களின் நடை (Style) அமைப்பு (Pattern), இசைத்திறன் (Tune) முதலியன ஒவ்வொன்றும், தனிச் சிறப்புடையதாகும். "வாசுதீரவே காசு நல்குவீர் மாசில்மிழலையீர் ஏசல் இல்லையே" என்பன போன்ற சிறிய சிறிய பாடல்களும், "பந்தத்தால் வந்தெப்பால் பயின்று நின்று உம்பர்" என்பன போலும் மிகப் பெரிய பாடல்களும் போன்ற எத்தனையோ விதவிதமான வகைவகையான கவிதைகளை, நம் தமிழ்மொழிக்கு ஒருபெரும் கலைச் செல்வமாகப் படைத்து வழங்கிய ஞானசம்பந்தர்க்கு நிகராக

நல்நிலைச் கவிஞர் பிறரொருவரை நாம் காண்டல் அரிது. மொழிமாற்று, மாலைமாற்று, வழிமொழிமடக்கு, சந்தஇயமகம், ஏகபாதம், திருஇருக்குக்குறள், திருவெழுகூற்றிருக்கை, நாலடிவைப்பு, நாலடிமேல்வைப்பு, நடையில் முடுகும் இராகம், சக்கரமாற்று, கூடச்சதுக்கம் முதலிய புதிய புதிய அற்புதச்சித்திரக் கவிதைகளை நம் தமிழ் மொழிக்கண் "மூல இலக்கியம்" என்று மொழிந்து, மூதறிஞர்கள் போற்றும் வகையில் பாடியளித்துத் தமிழ் வளர்ச்சிக்குப் பல்லாற்றாலும் ஆக்கம் தேடியவர், திருஞானசம்பந்தரே யாவர்.

**சீர்திருத்தப் புரட்சியாளர்**

திருஞானசம்பந்தர் ஒரு பெரும் கவிஞர், பக்தர், அருளாளர் மட்டுமேயல்லர்; ஒப்புயர்வற்ற ஒருபெரும் சமுதாயச் சீர்திருத்தக்காரரும் (Social Reformer & Revolutionary) ஆவார். அவர் வாழ்ந்திருந்த காலத்துச் சமுதாய மக்களிற் பலர், தம் சொல்லும் செயலும், கொள்கையும் ஒழுக்கமும் ஒன்றிலொன்று முரணி இகலி நிற்க, சமுதாயத்திற் பல குழப்பமும் சீர்கேடும் விளைத்து வந்தனர். அவர்களின் குற்றங்குறைகளையும், ஒழுக்கக் கேடுகளையும் அஞ்சாது எதிர்த்து மறுத்துத் திருத்தும் சமுதாயப் பெருவீரராகத் (Opposer of Social Evils) திருஞானசம்பந்தர் திகழ்ந்தார். தவறான கொள்கைகளும் செயல்களும், சமுதாயத்திற் பரவிக் கேடு விளைவிக்காமல், அவற்றை அஞ்சாது ஆண்மையுடன் எதிர்த்துப் பிரச்சாரம் செய்யும் பெருந்திறனில் திருஞானசமபந்தர்க்கு நிகராவர் எவரும் இலர் எனலாம். (Powerful Propagandist). "மிண்டர் மிண்டாய்ப் பேசிய பேச்சு மெய்யல்ல" "குண்டு முற்றிக் கூரையின்றியே பிண்டம் உண்ணும் பிராந்தர் சொற்கேளேல்" "பட்டைத்துவர் ஆடைப் படிமம் கொண்டாடும் முட்டைக் கட்டுரை மொழிவ கேளாதீர்" என்பன போன்றுவரும் அவர்தம் பாடற் பகுதிகள், இவ்வுண்மையை மெய்ப்பிக்கும். தம்முடைய கொள்கைகளை நாட்டின் பல பகுதிகளிலும் சென்று மக்களிடையிற் பரப்புதலில் அவர் சிறிதும் அயராத பயணியாக (Indefatigable traveller) விளங்கினார்.

"மன்னன் நீறணிந்தான் என்று மற்றவன் மதுரை வாழ்வார்
துன்னிநின் றார்கள் எல்லாம் தூயநீறணிந்து கொண்டார்"

என்னும்படி ஒருபெரும் அமைதிப் புரட்சியை, அருளியற் புரட்சியை, விளைவித்த அவர்தம் சிறப்பிற்கு அளவேயில்லை.

**கொள்கை விளக்கம்**

(1) அக்காலத்தில் சமுதாய மக்களிடையில் வேற்றுவரால் பரப்பப்பட்டிருந்த போலிக் கொள்கைகளைக் கடிந்து மறுத்துப் போக்கி ஒழிப்தில், அவர் பேராற்றல் மிக்குப் பிறங்கினார். அவர் காலத்தில் சிலர் பெண்பிறவி இழிவெனக் கருதிப் பழித்துப் புறக்கணித்தனர். அதனைக் கடிந்து ''நாணார், நல்லது அறியார், நாளும் குரத்திகள் பேணார்'' என அவர்களின் பொருந்தாச் செயலைக் கடிந்துரைத்தார். ''மங்கையர்க்கரசி வளவர்கோன் பாவை வரிவளைக்கை மடமானி பங்கயச் செல்வி பாண்டிமாதேவி'' எனத் தம் பாடல்களில் பெண்மையைச் சிறப்பித்துப் புகழ்ந்தார்.

(2) துறவு நெறியே உய்தி தருவது எனப் பலரும் சொல்லி வந்தபொழுது, ''பெண்ணின் நல்லாளொடும் பெருந்தகை இருந்ததே'' என இறைவனும் பெண்ணுடன் கூடி இல்லற நெறியாளனாய் இருப்பதனை எடுத்துரைத்தார்.

(3) இவ்வுலகம் துன்பமயமானது, வெறுக்கத்தக்கது என மருள்நோக்குக் கொள்கைகளையே (Pessimism) பரப்பி வந்த மக்கள் பெருந்திரளாக மேலோங்கி இருந்த நிலையில், அவர்களுக்குச் சிறிதும் அஞ்சாது இவ்வுலகம் இன்பமயமானது, ''மண்ணில் நல்லவண்ணம் வாழலாம் வைகலும் எண்ணில் நல்ல கதிக்கு யாதுமோர் குறைவில்லை'' என்பன போன்ற தெருள்நோக்குக் கொள்கை (Optimism) களைப் பரப்பிச் சமுதாய நலம்பெருக்கியவர் திருஞானசம்பந்தரே ஆவார்.

(4) இவ்வுலகம் வெறும் கனவு, பொய்த்தோற்றம், நிலையில்லாதது என்னும் கருத்தையே மிகுதியாக வளர்ந்து வந்த வேற்றவர் கூற்றுக்களை மறுத்து, இவ்வுலகம் மெய்யானது, எழில் மிக்கது, வாழ்க்கைக்குத் துணை புரிவது என்னும் உண்மைகளை உணர்த்தும் வகையில், இயற்கையின் எழில் நலங்களை அழகோவியங்களாகத் தீட்டிக்காட்டிச் சொற்பொருட் சுவைநலங்கள் நிறைந்த அற்புதமான கவிதைகளைப் பாடியருளியவர், நம் ஞானசம்பந்தரே ஆவார்.

''வலம்வந்த மடவார்கள் நடமாட முழவதிர மழைஎன்று அஞ்சிச்
சிலமந்தி அலமந்து மரம்ஏறி முகில்பார்க்கும் திருவை யாறே'' (1)

"பாரிசையும் பண்டிதர்கள் பன்னாளும்
பயின்றோதும் ஓசை கேட்டு
வேரிமலி பொழிற்கிள்ளை வேதங்கள்
பொருள்சொல்லும் மிழலை யாமே" (2)

"கைம்மா வேந்திக் கடுவனோடு
ஊடிக் கழைபாய்வான்
செம்முக மந்தி கருவரை
ஏறும் சிராப் பள்ளி" (3)

"வம்பார் குன்றம் நீடுயர் சாரல்
வளர் வேங்கைக்
கொம்பார் சோலைக் கோல வண்டு
யாழ்செய் குற்றாலம்" (4)

"பூந்தண் நறுவேங்கைக் கொத்திறுத்து
மத்தகத்திற் பொலிய ஏந்திக்
கூந்தற் பிடியும் களிறும்
உடன் வணங்கும் குறும்பலாவே" (5)

என்பன போல, இயற்கை எழில் நலங்களை இனிதெடுத்துப் பாடும் திறனில் உலகப் பெரும் கவிஞர்களாகக் கூறப்பெறும் ஷெல்லி, வொர்ட்ஸ்வொர்த், கீட்ஸ் போன்ற கவிஞர்களும் இவர்க்குச் சிறிதும் ஈடாக மாட்டார் என்பது உண்மை, வெறும் புகழ்ச்சி இல்லை.

**சமுதாயத் தொண்டர்**

திருவீழிமிழலையில் பஞ்சம் நேர்ந்தபோது இறைவன்பால் படிக்காசு பெற்று, இரண்டும் பொழுதும் பறைசாற்றி மக்களையெல்லாம் திரளாக அழைத்துச் சோறளித்துத் துயர்கூர் வறுமை தொலைத்தருளியதும், திருக்கொடிமாடச் செங்குன்றூரில் நளிர்சுரம் பரவி மக்களை நலிந்தபோது "அவ்வினைக்கு இவ்வினையாம்" எனத் தொடங்கும் பதிகம் பாடி அந்நோய் நீங்கப் புரிந்தருளியதும் பிறவும், இவர் தம் சமுதாயத்தொண்டின் (Social Service) நீர்மையினையும் மேன்மையினையும் புலப்படுத்தா நிற்கும்.

தாம் உயரிய வேதியர் குலத்தில், கௌணியர் மரபில் உதித்தவராய் இருந்தும், யாழ்ப்பாணர் என்னும் குலத்தில் தோன்றிய திருநீலகண்டர் என்பவரை தம்முடன் எப்போதும் பிரிவற இருந்தி வைத்துக்கொண்டு, அன்பு பூண்டு நட்புப் பாராட்டித் தண்ணளிகள் புரிந்து வந்த இவர்தம் பெருந்தகைமை, இந்நாளைய தீண்டாமை ஒழிப்பிற்கும், சாதி ஒழிப்பிற்கும், இற்றைக்குப் பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே வழிவகுத்துக் காட்டிய மாட்சிமை சான்றதாகும், இவ்வாற்றால் அவர் சமுதாயச் சமத்துவ நிலைக்குப் பெரிதுழைத்த பெருந்தகையார் (Champion of Social Equality) என்பது தெளியலாம்.

திருப்பாச்சிலாச்சிரமம் என்னும் தலத்தில் கொல்லிமழவன் மகளை வருத்திய முயலகன் என்னும் நோயை நீக்கியருளியதும், திருமருகல் என்னும் தலத்தில், ஒரு பெண்ணின் பொருட்டு இரங்கிப் பாம்பு கடித்து இறந்த அவளது காதலனை எழுப்பி தந்து, இருவரையும் மணம் புணர்ந்து மகிழுமாறு செய்வித்ததும், திருஞானசம்பந்தர் அன்பும் அருளும் நிறைந்த ஒருபெரும் மக்கள் நலக் கொள்கையர் (Humanist) என்பதனைப் புலப்படுத்தும்.

சிறுத்தொண்டர் முருகர் நீலநக்கர் திருநாவுக்கரசர் குலச்சிறையார் நின்றசீர்நெடுமாறர் முதலிய பலருடனும் கலந்து பழகிய அவர்தம் உயர்வற உயர்ந்த சிறந்த பண்புநலங்களை ஆராய்ந்து செவ்விதின் தெளிந்து உணர்வோர்க்குத் திருஞானசம்பந்தரின் அருமை பெருமைகள் பளிங்கென விளங்கும்.

**முடிவுரை**

இத்தகைய எத்தனையோ பற்பல சிறப்புக்களையுடைய திருஞானசம்பந்தர், ‘‘பல்வேறு கொள்கைகளாலும் சூழ்நிலைகளாலும் சிதறுண்டு வீழ்ச்சியுற்றுக் கிடக்கும் ஒரு நாட்டின் மக்களை அவர்கள் பேசும் தாய்மொழியின் வாயிலாகவே, அம்மொழியின் உணர்ச்சியும் ஆர்வமும் ஊட்டி ஒன்றுபடுத்திக் கிளர்ந்து எழச்செய்து முன்னேற்றி உய்விக்க முடியும்’’ என்னும் அரியபெரிய உண்மையினை நன்கினிது உணர்ந்திருந்தார். நம் தமிழக மக்களை நன்னிலை எய்தச் செய்தல் குறித்து நாளும் இன்னிசையால் தமிழ் பரப்பி, தமிழுக்கும் தமிழர்க்கும் அளப்பருந் தொண்டுகள் புரிந்தருளினார். தம்மைத் தமிழ் ஞானசம்பந்தன் என்று குறிப்பிட்டுக் கொண்டு மகிழ்ந்தார்.

முற்றும்

உ

# வயதில்லா வயதினர் வாழியவே!

(கலாநிதி கவிஞர் வி. கந்தவனம், அன்புநெறி சிறப்பாசிரியர்)



ஆழ்கடலான் ஒரு புனைபெயரா – இல்லை
ஆழ்கடலேதான் அவரறிவா?
வாழ்வியல் தத்துவம் நன்குணர்ந்த – ஒரு
வள்ளுவர் பரம நாதர் ஐயா!

ஊரெங்கும் வாழ உணர்வுடனே – உள்ள
உண்மையை அஞ்சா நெஞ்சுடனே
பீரங்கிபோலே முழங்கிடுவார் – இவர்
பேச்சினைக் கேட்பார் உய்திடுவார்!

சிந்தனை எழுத்திலும் இட்டிடுவார் – பல
சீரிய நூல்களைத் தொட்டிடுவார்
பைந்தமிழ் வழக்க ஒழுக்கங்களைச் – சொல்லும்
படைப்புகள் தந்த பரமரிவர்!

அடக்கம் மிகுந்த ஆசிரியர் – வடமர்
ஆட்சி யாற்றல் தேசுடையார்
பொடிகொள் மேனிப் பேறுடையார் – வல்லி
புரத்தான் பத்தி வீறுடையார்.

காட்சிக் கெளிய அன்பாளர் – சொல்
கனியப் பேசும் பண்பாளர்
மாட்சி மிகுந்த திருப்பதியார் – தமை
மனையாக் கொண்ட பெருந்தவத்தார்.

இமயத்துக்கு வயதில்லை – இந்த
இளவல் தனக்கும் வயதில்லை
சமயத்துக்கும் வயதில்லை – எங்கள்
சான்றோருக்கும் வயதில்லை!

நன்றே நாளும் வாழியவே – பரம
நாதர் தொடர்ந்து வாழியவே
ஒன்றாய் திருப்பதி அம்மையுடன் – குறை
ஒன்றும் இல்லா தோங்குகவே!

– – – –

# நல்லொழுக்கம்

(திருமதி செ. கனகசபை, ஓய்வு பெற்ற ஆசிரியை, புளோரிடா)

இவ்வுலகின் படைப்பிலுள்ள சீவராசிகள் அனைத்திலும் மேன்மையானது மனிதப்பிறவி. மனிதப்பிறவி மாண்புறுவதற்கு நல்லொழுக்கம் மிக முக்கியமானது. மக்களது வாழ்க்கை ஐம்பொறிகளாகிய மெய், வாய், கண், மூக்கு, செவி ஆகியவற்றினால் மட்டும் செயற்படுவதல்ல. இவையுமாய் இவற்றுக்கு அப்பாற் பட்டதுமாய், உணர்வு, மனம் எனும் இவற்றின் செயற்பாட்டினாலும் வாழ்வதே வாழ்க்கையாகும். இன்றைய சமுதாயச் சூழ்நிலையில் நல்வழிக் கருத்துக்களும், நல்லொழுக்கச் சிந்தனைகளும் மிகவும் தேவைப்படுகின்றன.

எல்லாப் பொருளிலும் சிறந்தது உயிர். அவ்வுயிர்க்குச் சிறப்பைக் கொடுப்பது நல்லொழுக்கம். எல்லாச் சேவைகளுக்கும், தர்மச் செயல்களுக்கும் துணையாயுள்ளது நல்லொழுக்கம். ஆதலால் நல்லொழுக்க நெறிகள் எவை என ஆராய்வோம். பொறுமை, மன்னித்தல், மன அடக்கம், திருடாமை, அகப்புறத் தூய்மை, இந்திரிய நிக்கிரகம், கல்விஞானம், ஆத்மஞானம், உண்மை பேசல், கோபமின்மை ஆகிய பத்தும் மனுதர்மம் கூறும் அம்சங்களாகும். கொலை, களவு, பொய், காமம், மது ஆகிய ஐந்தும் பஞ்சமா பாதகம் என்பர்.

நல்லொழுக்கத்துக்கு ஒரே விடயம் சுயநலமின்மை. நாம் ஒவ்வொருவரும் இறைவனின் அம்சம். நம் ஒவ்வொருவரின் வாழ்க்கையும் பிரபஞ்ச வாழ்க்கையின் அம்சமாகும். இதைப் புரிந்து கொள்ளும்போது நாம் சுயநலம் அற்றவராவோம். அப்போது சேவையே வாழ்க்கையாகும். இது நல்லொழுக்க நிலைக்குக் கொண்டு செல்லும். பொதுவாக நல்லொழுக்கம் நெறிகள் எல்லாம் இதைச் செய்யக் கூடாது என்ற எதிர்மறை முனையில் இருக்கும். ஆனால் நாம் அதன் உடன்பாட்டு அம்சங்களை எல்லாம் ஆராய்ந்து வாழ்வில் நிலையான நல்லொழுக்கத்தைப் பெறலாம்.

நல்லொழுக்கத்துக்கு முக்கியமான குணங்கள் சுதந்திரம், பயமின்மை, மனோபலம் என்பன ஆகும். மனோ பலமின்மையால் பயப்படுகின்றான். பயத்தினால் சுதந்திரத்தை இழந்து பொய்சொல்கிறான், கொள்ளை அடிக்கிறான், கொலையும் செய்கிறான். சுதந்திரமின்மை, பயம், மனேபலமின்மை என்பன ஒன்றுடன் ஒன்று தொடர்பானவை.

ஒவ்வொருவரும் தமக்குள் இருக்கும் ஆற்றலை நினைத்தால் குற்றங்கள் நேரா.

நல்லொழுக்க நியதிகள் யாவும் தர்மச் செயல் என்பதுதான் பாகவதத்துவம். மனிதர் அடையவேண்டிய அறம், பொருள், இன்பம், வீடு எனும் நான்கையும் இலட்சியமாகக் கொண்டதே நல்லொழுக்கம். இது மனிதனின் அடிப்படைப்பண்பு. இப்பண்புதான் மனிதனை மிருகங்களிலிருந்து வேறுபடுத்திக் காட்டுகின்றது. மானிட குலத்தின் பிரச்சனைகளின் பாதி அளவு ஒழுக்கம் சம்பந்தமானவை. இன்றைய மனிதன் அறிவில் சிறந்தாலும் நல்லொழுக்கம் பற்றிய கருத்துக்களை அறியாதவனாய் இருக்கின்றான்.

பலர் கஷ்டமான சூழ்நிலையிலிருந்து தப்புவதற்காகப் பொய் சொல்கிறார்கள். இன்னும் பலர் பணத்திற்காகக் கள்ளச்சந்தை, உணவில் கலப்படம், ஏழைகளைச் சுரண்டல் நண்பனை வஞ்சித்தல், நல்லவர்களைத் துன்புறுத்தல் ஆகிய தீய செயல்களைச் செய்கின்றார்கள். வேறு சிலர் பெண்களை ஏமாற்றுதல், முகஸ்துதி புரிதல், போகவிட்டுப் புறம் பேசல் ஆகியவற்றைச் செய்கின்றார்கள். இவற்றுக் கெல்லாம் காரணம் மனிதர்களிடம் சில அடிப்படை உணர்வுகள் இல்லாமையே. ஒருவனிடம் சுதந்திரம், பயமின்மை, மனோபலம் ஆகியவை அமையுமானால் அவன் ஒருபோதும் நல்லொழுக்க நெறியினின்று தவறான். எனவே ஒருவன் நன்னெறியில் நின்று தவறாதபோது முயற்சியாளன் ஆவான். பொருளீட்டுவான். மனம், வாக்கு, காயம் ஆகிய மூன்றினாலும் சேவை புரிவான்.

சிலர் காவல்துறை, அரசாங்கம், சமுதாய சட்டதிட்டம் என்பவற்றிற்குப் பயந்தும், சமுதாய ஏளனங்களுக்குப் பயந்தும் தீய செயல்களில் ஈடுபடாமல் இருக்கின்றனர். ஆனால் சுதந்திரம், பயமின்மை, மனோபலம் ஆகியவற்றுடன் செயல்புரிந்து, தலைநிமிர்ந்து நடப்பவனே நல்லவன். எனவே பிள்ளைகள் வளரும்போதே பெற்றோர் உணவு, பள்ளிப் படிப்புடன் இந்த நற்பண்புகளையும் ஊட்டி வளர்க்க வேண்டும். நல்ல செயல்களைக் கற்பிக்க வேண்டும். அத்துடன் தீய செயல்களின் அபாயங்களையும் கற்பித்தல் வேண்டும். அப்போதுதான் நாட்டில் நல்லதொரு சமுதாயத்தை உருவாக்கலாம். இனிப் பயம் காரணமாகப் பொய் வருகின்றது. பொறுமை இன்மை காரணமாகக் கொலை

நடக்கின்றது. ஆசை காரணமாகக் களவு ஏற்படுகின்றது. ஒரு பிள்ளை கெட்டவனாவது இளமையில் பிள்ளை வளர்ப்பென்றே கூறலாம். நல்லவனாவதும் கெட்டவனாவதும் பாரிய அளவில் பெற்றோரின் கையில் எனலாம்.

இனி, நல்லொழுக்கம் எது? தீயொழுக்கம் எது? அவற்றின் நன்மை தீமை எவை என ஆராய்வோம். நல்லொழுக்கம், கூடாவொழுக்கம், இவற்றின் நன்மை தீமைகளை ஔவையாரும் வள்ளுவரும் திருமூலரும் இன்னும் பல மேதைகளும் உலகுய்யும் நோக்குடன் பாடியுள்ளனர். வள்ளுவர் திருக்குறளில் ஒழுக்கத்தை விளக்கி தனி அதிகாரமே வகுத்தள்ளார். ஒருவனுக்கு வாழ்வில் எல்லா நலங்களையும் நல்குவது ஒழுக்கம். ஆதலால் அவ்வொழுக்கம் உயிரினும் சிறந்தது என்று

ஒழுக்கம் விழுப்பம் தரலால் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும்.

என்று கூறி, உயிரினும் மேலான ஒழுக்கத்தை மிகக் கவனமாகப் பேணிக்காக்கும்படி கூறுகிறார். மேலும் வள்ளுவர் ஒழுக்கமே மேன்மையை கொடுக்கும் என்றும், நன்றிக்கு வித்து நல்லொழுக்கம் என்றும், நல்லொழுக்க அவசியத்தையும் சிறப்பையும் கூறுகின்றார். இன்னும் தீய ஒழுக்கத்தைச் செய்பவன் பிறர் அறியாமலும், காணாமலும் செய்கின்றான். ஆனால் அவன் செய்யும் செயல் மட்டுமல்ல, மனதில் நினைப்பதைக்கூட, இவ்வுலகத்தில் அணுவுக்குள் அணுவாயும், ஒவ்வொரு உயிரினும் மறைந்துள்ளவரான அந்த இறைவன் கண்காணித்துக் கொண்டேயிருப்பார். அப்பிரான் அத்தீயவருக்கு இம்மைத் துன்பமும், மறுமை நரகமும் கொடுக்கத் தவறார். இதனைத் திருமூலர்,

கண்காணிஇல் என்று கள்ளம் பல செய்வார்
கண்காணி இல்லா இடமில்லை காணுங்கால்
கண்காணியாகக் கலந்தெங்கும் நின்றானை
கண்காணி கண்டார் களவொழிந்தாரே.

என்று கூறியுள்ளார்.

நாம் நற்செயலை விட்டுக் கூடாவொழுக்கத்தில் ஈடுபட்டால் இறைவன் போடும் கணக்கிலிருந்து தப்ப முடியாது. இறைவன் நம்மை மனம் உடைய மனிதப் பிறவியாகப் படைத்தது நல்லன புரிந்து நல்வாழ்வு பெற்று நற்கதி அடைவதற்கேயாகும். அதைப் புரிந்து நல்லன அல்லாத அனைத்தையும் தவிர்த்து நல் வாழ்வு வாழ்வோமாக.



# பொருள் வாசகம்

(கலாநிதி கவிஞர் வி. கந்தவனம், அன்புநெறி சிறப்பாசிரியர்)

**திருவா சகத்திற் சிவபெருமான் தாமே**
**பொருளாக நிற்பார் பொலிந்து.**

திருவாசகத்திற் சிவபெருமானே பொருளாக விளங்கி நிற்பார். (திருவாசகம் சிவனருளாற் பாடப்பெற்றது. அதில் அவரது பெருங்கருணைத் திறனே பாடப்பட்டுள்ளது. அதற்கும் மேலாக, தில்லையில் திருவாசகத்தின் பொருள் யாது என்று கெட்டதற்கு மணிவாசகப் பெருமான் நடராசப் பெருமானைச் சுட்டிக் காட்டினார் என்ற வரலாறுமுண்டு.)

**பொருளைத் தமதுழைப்பால் பொய்ப்பின்றி ஈட்டி**
**அருளாளர் செய்வார் அறம்.**

இறையருள் பெற்றவர் செல்வத்தைத் தமது முயற்சியால் நேர்மையான வழியில் சேர்த்து, அதனைக்கொண்டு பலவிதமான தருமப்பணிகளைச் செய்வர். (பொய்ப்பின்றி – கள்ளங்கபடம் இன்றி. ஈட்டுதல் – சேகரித்தல்; திரட்டுதல். பிறர் செல்வத்தைக் கொண்டு செய்யப்படும் தருமம் தருமமாகாது என்பது குறிப்புப் பொருள்.)

**கொண்டுசென்ற செல்வத்தை வாசகரும் கோகழியில்**
**தொண்டுகளுக் கீந்தார் துணிந்து.**

(மதுரையிலிருந்து திருப்பெருந்துறைக்குக் குதிரைகள் வாங்கக்) கொண்டு சென்ற பொருளை மணிவாசகப் பெருமான் திருப்பெருந்துறையில் இறைபணிகளுக்குத் துணிந்து வழங்கினார். (கோகழி – திருப்பெருந்துறை. ஈந்தார் – கொடுத்தார்; வழங்கினார். துணிந்து – தமக்குச் சொந்தமில்லாத செல்வத்தைச் செலவு செய்யத் தோன்றிய மனவுறுதி.)

**மாசில் பரிவாங்கும் செல்வத்தை மந்திரியார்**
**ஈசன் பணிக்கிறைத்த தேன்?**

குற்றமில்லாத நல்ல குதிரைகளை வாங்கிவரக் கொடுக்கப்பட்ட செல்வத்தைப் பாண்டியன் மந்திரியாராகிய மாணிக்கவாசகர் இறைவன் பணிக்கு வாரி வழங்கியது ஏன்? (மாசில் –மாசு இல் – குற்றம் இல்லாத. பரி – குதிரை. இறைத்தல் – அள்ளி வழங்குதல்.)

**அரசன்தன் செல்வத்தை ஆண்டவனுக் கையன்**
**பரிசாக்கல் என்னவகைப் பண்பு?**

பாண்டிய மன்னனுக்குரிய பொருளை மணிவாசகப் பெருந்தகை இறைபணிக்குக் கொடுத்தல் எந்தவகையிற் பண்புடைமையாகும்? (ஐயன் – பெருமைக்குரிய மணிவாசகர். பரிசாக்கல் – அன்பளிப்புச் செய்தல்.)

**கோகழியிற் கோமான் குருவருளைப் பெற்றபின்னர்**
**ஏகனுக்கே ஆட்பட்டா ரே.**

திருப்பெருந்துறையில் சிறந்வராகிய மாணிக்கவாசகர் இறைவனின் அருளால் ஞானத்தைப் பெற்ற பின்னர் அவருக்கே ஆட்பட்டு அடியவராகினார். (கோமான் – பெருமையிற் சிறந்தவன். ஏகன் – ஒருவனேயாய இறைவன்.)

**ஆட்பட்ட பின்னர் அனைத்தும் அவனென்ற**
**கோட்பாட்டுள் நின்றார் குறித்து.**

அவ்விதம் ஆட்பட்டதன்பின் இந்த உலகத்துப் பொருள்கள் யாவும் இறைவனின் ஆட்சிக்குட்பட்டதே என்ற ஞானக் கொள்கையில் தவறாது நின்றார். (அவன் – சிவபெருமான். கோட்பாடு – கொண்டகொள்கை. குறித்து – விலகாது.)

**பந்தங்கள் பாறியபின் பாடென்ன நாடென்ன**
**எந்தவினா வுக்குமிட மில்.**

உலகப் பற்றுகள் அறுந்த பின்னர் மந்திரிக்குரிய கடமையுணர்வும் பாண்டிநாட்டுக்குத் திரும்பிச் செல்வதுபற்றிய சிந்தனையும் மணிவாசகரைவிட்டு நீங்கிய காரணத்தால் அவைபற்றிய கேள்விகளுக்கு இடமில்லையாம். (பாறுதல் – வீழுதல். பாடு – கடமை, உலக ஒழுக்கம்.)

**உள்ளதெல்லாம் உற்பத்தி யாளர்க் குரிமையதால்**
**கள்ளமில்லா அன்பருள்ளம் காண்.**


உலகத்திலே உள்ள பொருள்கள் எல்லாம் அவற்றை உண்டாக்குபவனுக்கே உரிமை யானவை. அந்தவகையில் இறைவனுக்குச் சொந்தமான பொருளை இறைவனுக்கே கொடுத்த அன்புள்ளம் படைத்த மணிவாசகப் பெருமானின் களங்கமற்ற

செய்கைச் சிறப்பைக் கண்டுகொள்வீராக! (உற்பத்தியாளர் – உண்டாக்கியவர், விளைவித்தவர். விளைவித்தவர் இறைவர். அவ்வகையில் பாண்டியன் கொடுத்த செல்வமும் இறைவனுடையதே என்பது பொருள்.)

**பொய்யனேன் பொய்யனேன் என்றே அவர்புலம்பல்
செய்யினும் பொய்யிலார் தேர்.**

தான் பொய்யன் பொய்யன் என்று மாணிக்கவாசகர் திருவாசகத்தில் அழுது பாடியிருந்தாலும் அவர் இறைவன் அருளாற் பொய்யானவற்றைச் செய்யவில்லை என்பதை அறிந்து தெளிவீராக! (குதிரைகள் வரும் என்று சொன்ன நாளில் அவை கொண்டுவரப்படாததால் பாண்டிய மன்னன் மாணிக்கவாசகரைப் பொய்யன் என்று குற்றஞ்சாட்டிச் சிறையில் அடைத்தான். இதனை இறைவனுக்கு முறையிட்டுத் தன்னைப் பொய்யன் என்று சுட்டித் திருவாசகத்திற் பல இடங்களிற் பாடியுள்ளார். காண்க:
1."பொய்யவனேனைப் பொருளென ஆண்டு"– நீத்தல் விண்ணப்பம்.
2."பொய்யனேன் அகம்நெகப் புகுந்து"– செத்திலாப் பத்து.)

உ
சிவமயம்
**சைவசமயகுரவர் பாடசாலை,**
**சைவ சித்தாந்த மன்றம், கனடா**
**வழங்கும்**



## திருவருட் செல்வர் விழா - 2009

**(பதின்நான்காவது விழா)**

**காலம்:** வெள்ளிக்கிழமை 21-08-2009 , மாலை 4 மணி
**இடம்:** யாழ் கூட்டுறவு இல்ல மண்டபம்
**(2584 Rugby Road, Mississauga)**

**நிகழ்ச்சிகள்**

* பூசையும் கூட்டு வழிபாடும் * திருமுறை ஓதல்
* மாணவர்களின் பண்ணிசை, பேச்சுகள்,
* **வெளியீடு:** சைவசமயம் சார்ந்த நூல்கள்
  **"அன்புநெறி" திருவருட் செல்வர் விழா மலர்**-2009
* **பரிசளிப்பு:** *07–08–2009* இல் நடைபெறும் சைவசமய அறிவுத்தேர்வில் சித்தி அடைவோருக்கு பரிசில்களும், சான்றிதழ்களும் வழங்கப்படும்.

சென்ற இதழ் தொடர்ச்சி......

# திருவள்ளுவர் வரலாறும் திருக்குறளும்

(சுவாமி வேதாசலம் என்னும் மறைத்திரு. மறைமலை அடிகள் அவர்கள் 1935 இல் திருவள்ளுவர் திருநாட்கழகத்தின் திருநாள் விழாவில் ஆற்றிய தலைமையுரை)



இனி, இன்னாச் சொல்லும் விலக்கற்குரித்தாம்.

"தீயவை தீய பயத்தலால் தீயவை
தீயினும் அஞ்சப் படும்."

தீமை என்றவுடனே துறக்க நிரயம் என்று கொண்டுவிட வேண்டுவதில்லை. "அறஞ் செய்தான் சுவர்க்கம் புகும். மறம் செய்தான் நிரயம் புகும்" என்று கூறுவதெல்லாம், நன்மை செய்தால் நன்மை விளையும் தீமை செய்தால் தீமை விளையும் என்பதைக் குறிப்பதற்கேயாம். சிலர்க்கு அறஞ் செய்வதால் பெரியதோர் இன்பம் விளையக் கூடும்.

"ஈத்துவக்கும் இன்பம் அறியார்கொல் தாமுடைமை
வைத்திழக்கும் வன்க ணவர்."

என்று ஆசிரியர் கூறியது இது கருதியேயன்றோ? இத் திருவள்ளுவர் திருநாட்கழகத் தலைவராயிருக்கும் என் நண்பர் திரு. கா. நமசிவாய முதலியார் வீட்டிற்குச் சென்றவர்கள் இல்லை என்று திரும்பியதில்லை என்று நான் பன்முறை கேள்விப் பட்டிருக்கிறேன்; வறியர் வறுமை தீர்வர்; பசித்தார் பசி தீர்வர்; உதவி நாடியோர் உதவி பெறுவர். இவரன்றோ உண்மைத் தமிழர்! இனி ஈத்துவக்கும் இன்பத்துக்கும் பெருமைக்கும் எடுத்துக்காட்டாகச் சங்கச் செய்யுட்களில் வழங்கும் குமணனார், பெருஞ்சித்திரனார் நிகழ்ச்சி யாவரும் அறிந்ததே. இரந்தவன் இன்முகம் காணுவதே இலக்காக அக்காணுமளவு ஈதலே ஈகையாம். இத்தகைய ஈதல் அறத்திற்கு முதற்கண் வேண்டப்படுவது நட்பினர், பகைவர், நொதுமலர் என்னின்றி, வருவோர் யாவர் மாட்டும் இன்முகம் காட்டி இன்சொல் கூறுதலேயாம். இதனாலேயே இன்னாச் சொல் நீக்கத்தின் இன்றியமையாமை தெற்றென விளங்கும்.

இனி, அறத்தை இல்லறம், துறவறம் என்று இரண்டாகப் பகுத்துக் கூறியது திருவள்ளுவர்தான். அவர் காலத்திற்கு முன் அவ்வாறு பகுத்துக் கூறப்பட்டுள்ளதாகக் காணப்படும் நூல்

ஒன்றுமில்லை. தமிழுக்கு வைரத் தூண் எனக் கருதப்படும் தொல்காப்பியத்திலும் இப்பிரிவினை காணப்படவில்லை. மனைவியோடு உடனிருந்து அறத்தாற்றின் இல்வாழ்க்கையாற்றி ஏமஞ்சான்ற மக்களோடு துவன்றி இறைவனை நினைந்திருத்தலே சிறந்த செயலாகத் தொல்காப்பியத்தில் கூறப்பட்டது. பௌத்த, சமணக் கொள்கைகள் பரவி, மனை வாழ்க்கை வெறுக்கப்பட்டு, துறவறம் பெரிதும் பாராட்டப்பட்டு வந்த காலத்தே ஆசிரியர் குறளை எழுத நேரிட்டதாகையால், இப்பிரிவினையைத் தாம் கைக்கொண்டார் போலும்! துறவறத்தைக் கூற வந்தாரேனும், ஆசிரியர் பௌத்த சமணர்களைப்போல் கடிய கொடிய முறைகளைக் கூறாமல்,

> "பற்றுக பற்றற்றான் பற்றினை அப்பற்றைப்
> பற்றுக பற்று விடற்கு."

என்று திருந்த மொழிந்தார். உள்ளம் வேறு ஒன்றைப் பற்றினாலன்றிப் பற்றிய ஒன்றை விடாது. குடிகாரனைக் குடியாதே என்று சொன்னாற் கேளான்; 'கள்ளைக் குடியாதே, பாலைப் பருகு; பழச்சாற்றைக் குடி' என்றாற்றான் வழிக்கு வருவான், இது மன நூலிற் கண்ட உண்மை.

இனி, திருக்குறளாகிய நீதி நூலைப் படிப்பதில் ஒருவர்க்கு மனம் அதிர்ச்சி அடையக் கூடும். இருந்தாலும், பெரும்பயன் கருதி அதனைப் படித்தலே சீரிதாம். படித்த குறளைக் கொண்டு தான் அவ்வழி நிற்றாலன்றி, ஒருவன் பிறன்மாட்டுக் குற்றங் கண்டவிடத்து அவனைத் திருக்குறட் சான்றாகத் திருத்த முயலுதல் ஆகாது. கற்றதற்குத் தக ஒழுகுதலே சிறந்தது என்பது ஆசிரியர் முடிபு.

ஒவ்வோர் அற நெறியையும் செய்துதான் ஆக வேண்டும் என்று ஆசிரியர் வற்புறுத்திக் கூறவில்லை.

> "ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
> சொல்லும் வாயெல்லாம் செயல்."

என்றுதான் கூறினார். ஒவ்வொன்றைப் பற்றிக் கூறும்போதும் அதனினும் சிறந்தது வேறில்லை என்று ஆசிரியர் கூறியுள்ளாரேனும், மிகவும் நுணுக்கமாகத் தராதரம் உய்த்துணருமாறு வைத்தே கூறிப் போந்துள்ளார்.

"பொய்யாமை பொய்யாமை ஆற்றின் அறம்பிற
செய்யாமை செய்யாமை நன்று."

என்று "வாய்மை"யிற் கூறிய ஆசிரியர்,

"ஒன்றாக நல்லது கொல்லாமை மற்றதன்
பின்சாரப் பொய்யாமை நன்று."

என்று வகுத்துள்ளார். இதுவே அவர் நூலியற்றும் நுணுக்கச் சிறப்பாகும். இனி,

"வாய்மை யெனப்படுவது யதெனில் யாதொன்றும்
தீமை யிலாத சொலல்."

என்று ஆசிரியர் வரையறுத்துக் கூறியது ஜான் ஸ்ருவர்ட் மில் என்பாரின் பெரும்பயன் என்ற "யுட்டிலிட்டேரியானிஸம்" (Uitilitarianism) என்ற கொள்கைக்கு அரண் கோலுவது கண்டு வியவாதார் யார்? இன்னும் இவ்வாறே விரிக்கிற் பெருகும்.

*1330* அருங்குறளையும் பாடம் பண்ணியிருந்த யான் இப்பொழுது பாதிக்குமேல் மறந்துவிட்டிருக்கிறேன். மறப்பென்னும் பகைவன் வாரிக்கொண்டான். என் செய்வது! ஒப்பில் பெருநூலாகிய இக்குறணூலின் பெருமையையும் ஆசிரியர் பெருமையையும் யான் கூறித் தங்களை மகிழ்வித்தற்கு வசதி கிடைத்தமை நோக்கி இறைவன் அருளை வழுத்துகிறேன்.

முற்றும்.

**பெருமிழலைக்குறும்பர் நாயனார்**
**குருபூசை நாள்: ஆடிச் சித்திரை (28-08-2009)**
**திருத்தொண்டர் புராணசாரம்**

கொண்டலபனி வளர் சோலை மிழலை நாட்டுக்
கோதில் புகழ்ப் பெருமிழலைக் குறும்பனார்சீர்
அண்டர்பிரான் அடியவருக் கடிய ராகும்
தேரவால் அணுக்கவன் தொண்டர்க் களாய்
மண்தொழும்எண் தருசித்தி வாய்ந்து ளார்தாம்
வன்தொண்டர் வடகயிலை மருவுநாள்முன்
எண்திகழும் மறைமூல நெறியூ டேகி
இலங்கொளிசேர் வடகயிலை எய்தி ளாரே.

சென்ற இதழ் தொடர்ச்சி......



# சிவஞானபாடியத்துள் திருவாசகச் சிந்தனைகள்

(சித்தாந்தகலாநிதி, சைவநன்மணி, சைவசித்தாந்த சாகரம், முனைவர் கோமதி சூரியமூர்த்தி, 'அன்புநெறி' சிறப்பாசிரியர்)

**இரண்டாம் சூத்திரக் கருத்துரை விளக்கத்தில் திருவாசகம்:**

இரண்டாம் சூத்திரக் கருத்துரை புனருற்பவம் வருமாறு நுதலிற்று. முதலுற்பவம் வருமாறு உணர்த்தாது, புனருற்பவம் வருமாறு உணர்த்துவது என்னை என்ற கேள்வி எழும் அல்லவா? அதற்குச் சிவஞானமுனிவர் இரு காரணங்களைக் கூறுகின்றார்.

1. உலகம் எண்ணற்ற பல ஊழிகளாகத் தோற்றுவித்தும், ஒடுக்கப்பட்டும் வந்தது. ஆதலால் இவ்வுலகத்து முதல் தோற்றம் நம் போன்றோரால் அறிய இயலாத ஒன்று.

2. முதல் சூத்திரத்தில் இவ்வுலகம் மகாசங்கார காரணனிடத்து ஒடுங்கி மீளவும் தோன்றும் என்று கூறப்பட்டது. இங்கு அதன் தொடர்ச்சியாக மீளவும் எவ்வாறு தோன்றும் என்று விளக்கப் படுகின்றது.

வினைக்கு ஈடாக மாயை என்னும் வித்தினின்றும் உயிர்கட்கு முதற்கண் உடல் முதலியன இறைவனால் தரப்படுகின்றன என்பது சைவநூற் கொள்கை. அப்படியானால் அநாதி கேவல நிலையிலுள்ள உயிர்கட்கு வினைத்தொடர்பு இல்லாமல் முதல் தோற்றத்திற்கு என்ன காரணம் என்ற வினா எழும் அல்லவா? அதற்கு விடையாக போற்றிப்ப∴றொடையிலுள்ள பின்வரும் வரிகளைக் கூறிச் சிவஞான முனிவர் விளக்குகின்றார்.

''பொற்புடைய மாயைப் புணர்ப்பின்கண் – முற்பால்
தது கரணமும் புவனமும் தந்து அவற்றால்
மன முதலால் வந்த விகாரத்தால் – வினை இரண்டும்
காட்டி அதனால் பிறப்பாக்கி''

(போற்றிப்ப∴றொடை கண்ணி 11–13)

அநாதி கேவல நிலையில் ஆணவமலத்தால் முற்றிலும் மறைக்கப் பட்டு இருட்டறையில் கிடக்கும் கண்ணற்ற குழந்தையைப் போலக் கிடந்த உயிர்கட்கு இறைவன் மாயையிலிருந்து முதற்கண் நுண்ணுடலைப் படைத்து அளிப்பான். நுண்ணுடைலைப் பெற்ற உயிர்கட்கு ஆணவமலத் தன்மைகட்கு ஏற்ப, அவைகட்கு

நுண்ணிய நிலையில் மனத்தில் விருப்பு வெறுப்புகள் வேறு வேறு வகையாய் நிகழும், அந்நிகழ்ச்சிக்கு ஏற்பத் தூலதேகங்கள் தரப்படும். இது முதலுற்பவத்தின் நிலை.

பின்பின் பிறப்புக்களில் உயிர்கள் செய்கின்ற நல்வினை, தீவினைகட் கேற்ப இறைவன் பிறப்புக்களைத் தருவான். இது புனர் உற்பவத்தின் நிலை. முதலுற்பவம், புனருற்பவம் என்ற இருவேறு வகைகளைத் தெளிவுபடுத்த,

> ''**விச்சது இன்றியே விளைவு செய்குவாய்**
> **விண்ணும் மண்ணகம் முழுவதும் யாவையும்**
> **வைச்சு வாங்குவாய்**'' (திருச்சதகம், செ. *96*)

என்ற திருவாசகத் தொடர்களை சிவஞான சுவாமிகள் மேற்கோளாகக் காட்டுகின்றார். (பாடியம், ப. *260*)

முதலுற்பவத்தில் உயிர்களிடத்து நுண்ணிய நிலையில் விருப்பு வெறுப்பு நிகழ்வதால் பருமை நோக்கில் ''விச்சது இன்றியே விளைவு செய்குவாய்'' எனப்பட்டது. அடுத்த தொடரில் 'வைச்சல்' – படைத்தல், காத்தலையும், 'வாங்குதல்' ஒடுக்குதலையும் உணர்த்தும். அது புனருற்பவத்தைக் குறித்தது.

### ஐந்தொழில்கள் பற்றிய விளக்கத்தில் திருவாசகம்

இறைவன் செய்யும் தொழில்கள் படைத்தல், காத்தல், ஒடுக்குதல், மறைத்தல், அருளல் என ஐந்தாகவும் படைத்தல், காத்தல், ஒடுக்குதல் என மூன்றாகவும் கூறப்படும். ஐந்தொழில்களும் முத்தொழில்களில் அடங்கும். எப்படி? இறைவனது மறைப்பாற்றல் என்பது உயிர்கள் வினைப்பயனை நுகரும் போது அதன் வழியே உயிர்களைச் செலுத்துவதாகிய முதல்வனது திருவுள்ளமே. ஆதலால் அது திதி என்னும் நிலைக்கச் செய்யும் தொழிலில் அடங்கும். அருளல் என்பது மீண்டும் பிறப்புட்படாமல் உயிர்களைத் தன்னிடத்தில் பொருந்தச் செய்யும் இறைவன் தொழில், ஆதலின் அது ஒடுங்குதல் என்பதில் அடங்கும். இது போல் ஐந்தொழில்களையும் இரண்டாக அடக்கிக் கூறும் மரபும் உண்டு என்று உணர்த்த சிவஞான முனிவர்.

''**பந்தமும் வீடும் ஆயினார்க்**கு'' திருபொற்சுண்ணம், செ. 20) என்ற திருவாசகத் தொடரை மேற்கோளாகக் காட்டுகின்றார். (பாடியம்,

ப. 269) பந்தம் என்பது கட்டுநிலை. பிறப்பிற்குக் காரணமாகும். ஐந்தொழில்களில் முதல் நான்கும் பந்தம் என்று கூறப்படும். ஏனெனில் இந்த நான்கிற்கும் உட்படும் உயிர்கள் கட்டு நிலையிலேயே உள்ளன. வீடு என்பது பிறப்பு நீங்கி பேரின்பம் உற்ற நிலை. அருள் பெற்ற உயிர்களே வீடுபேறு அடைபவை. சேக்கிழாரும், "**பந்தம் வீடு தரும் பரமன்**" (தடுத்தாட் கொண்ட புராணம், செ. 154) என்று பெரிய புராணத்தில் கூறுவது இங்கு நினைவு கூரத்தக்கது.

ஐந்தொழில்களையும் இறைவனது விளையாட்டு என்று கூறுவது மரபு என்ற சிவஞான முனிவர்,

"**காத்தும் படைத்தும் கரந்தும் விளையாடி**" (திருவெம்பாவை,செ. 12) என்ற திருவாசகத் தொடரை மேற்கோளாகக் காட்டுகின்றார் (பாடியம், ப. 278). இதை அடியொற்றி "சொன்ன ஐந்தொழில்கள் முன்னவன் விளையாட்டு என்று மொழிதலுமாம்" சிவஞானசித்தியார் சுபக்கம், செ. 56) என்று அருணந்தி சிவாசாரியாரும்,

"**ஏற்ற இவை அரன் அருளின் திருவிளையாட்டாக இயம்புவார்கள்**" (சிவப்பிரகாசம், 18) என்று உமாபதி சிவமும் கூறுகின்றார். விளையாட்டு என்ற சொல்லின் பொருள் நுட்பத்தை உணராத சிலர் இறைவன் செய்வது வீண் தொழிலோ என ஐயுறுவர். இன்னும் சிலர் விளையாடுவது மகிழ்ச்சியைத் தரும். இறைவனின் இத்தொழில்கள் அவனது விளையாட்டு என்று கூறப்படுவதால் அவன் அத்தொழில்களைக் தன் மகிழ்ச்சிக்காகச் செய்கின்றானோ என வினா எழுப்புவர். இறைவன் ஐந்தொழில்களை உயிர்களை உய்யக் கொள்ளும் கருணையினால் செய்கின்றான். "ஐயா நீ ஆட்கொண்டருளும் விளையாட்டின் உய்வார்கள் உய்யும் வகையெல்லாம் உய்ந்தொழிந்தோம்" (திருவெம்பாவை, செ. 11) என்ற திருவாசகத் தொடரினை இங்கு நினைவுகூர்க. விளையாட்டு என்ற சொல்லுக்குப் பின்வருமாறு சிவஞான முனிவர் பொருள் கூறுகின்றார். ஐந்து கலம் கொண்ட சாக்கினைச் சாத்தன் என்பவன் ஆயாசமின்றிச் சுமந்து சென்று மற்றோரிடத்தில் சேர்த்தான். அதைப் பார்த்தவர் "ஐங்கலப்பாரம் சுமத்தல் சாத்தனுக்கு விளையாட்டு" என்றார். இங்கே விளையாட்டு என்பது எளிதில் செய்யும் வலிமையைக் குறித்தது. உலக வழக்கிலும் அரிய செயல்களை எளிதில் செய்பவர்களை விளையாட்டாகச் செய்தான்

என்று கூறும் வழக்கம் உண்டு. எனவே விளையாட்டு என்ற சொல்லைக் கொண்டு இறைவன் செய்வது வீண் தொழில் என்பது சிறிதும் பொருந்தாது (பாடியம், ப. 278) எனத் தெளிவான விளக்கம் சிவஞான முனிவர் தருகிறார். அச்சொல் எளிதில் செய்யும் ஆற்றல் உடைமையை உணர்த்தும்.

..தொடரும்

**மன்றத்தில் நிகழ்ந்தவை**

## திருஞானசம்பந்தமூர்த்தி நானார் குருபூசை


சம்பந்தர் குருபூசை யூன் மாதம் 19ம் திகதி வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. வழிபாடு மாலை 7:00 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து சம்பந்தர் பற்றிய மாணவர்களது பேச்சுக்களும், பாடல்களும் இடம் பெற்றன. மாணவர்கள் வகுப்புரீதியாகத் தங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளையும், பாடல்களையும் ஆயத்தப்படுத்திச் சிறப்பாகச் செய்தார்கள். இறுதி வழிபாட்டுடன் குருபூசை நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அன்பர்களுக்கு இரவு உணவு வழங்கப் பெற்றது. இக் குருபூசையினை திரு. திருமுருகா குடும்பத்தினர் உபயமாக எடுத்துச் செய்தனர்.

## மாணிக்கவாசக சுவாமிகள் குருபூசை

மாணிக்கவாசகர் குருபூசை யூலை மாதம் 3ம் திகதி வெள்ளிக்கிழமை மிசிசாகா யாழ் கூட்டுறவு இல்ல மண்டபத்தில் நடைபெற்றது. வழிபாடு மாலை 7:00 மணிக்கு ஆரம்பித்தது. முதலில் கூட்டு வழிபாடும் பூசையும் இடம் பெற்றன. தொடர்ந்து மணிவாசகர் பற்றிய மாணவர்களது பேச்சுக்களும், பாடல்களும் இடம் பெற்றன. மாணவர்கள் வகுப்புரீதியாகத் தங்கள் தங்களுக்குக் கொடுக்கப்பட்ட கட்டுரைகளையும், பாடல்களையும் ஆயத்தப்படுத்திச் சிறப்பாகச் செய்தார்கள். இறுதி வழிபாட்டுடன் குருபூசை நிறைவு பெற்றது. கலந்து கொண்ட அன்பர்களுக்கு இரவு உணவு வழங்கப் பெற்றது. இக்குருபூசையினை திரு. விசுவலிங்கம் குடும்பத்தினர் உபயமாக எடுத்துச் செய்தனர்.

**சிறுவர் பகுதி**

## ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை-2



**2. பசுவியல்** (தொடர்ச்சி)

**38. சுவர்க்கத்திலே இன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து மனிதர்களாய்ப் பிறக்கும்.

**39. நரகத்திலே துன்பம் அனுபவித்த ஆன்மாக்கள் பின்பு யாது செய்யும்?**

தொலையாது எஞ்சி நின்ற கன்ம சேடத்தினாலே திரும்பப் பூமியில் வந்து, முன்பு தாவரங்களாயும் பின்பு நீர் வாழ்வனவாயும், பின்பு ஊர்வனவாயும், பின்பு பறவைகளாயும், பின்பு விலங்குகளாயும் பிறந்து, பின்பு முன் செய்த நல்வினை வந்து பொருந்த மனிதர்களாய்ப் பிறக்கும்.

**40.எழுவகைப்பிறப்பினுள்ளும் எந்தப் பிறப்பு அருமையுடையது?**

பசுபதியாகிய சிவபெருமானை அறிந்து வழிபட்டு முத்தியின்பம் பெற்றுய்தற்குக் கருவியாதலால் மனிதப் பிறப்பே மிக அருமை உடையது.

**41. மனிதப்பிறப்பை எடுத்த ஆன்மாக்களுக்கு எப்பொழுது அம்முத்தி சித்திக்கும்?**

அவர்கள் தங்கள் தங்கள் பக்குவத்திற்கு ஏற்பப் படிமுறையினாலே பிறவி, தோற்றம் பௌத்தம் முதலிய புறச்சமயங்களில் ஏறி ஏறி, அவ்வச் சமயத்துக்கு உரிய நூல்களில் விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள். பின்பு அப்புண்ணிய மேலீட்டினால் வைதீக நெறியை அடைந்து, வேதத்திலே விதிக்கப்பட்ட புண்ணியங்களைச் செய்வார்கள். பின்பு அப்புண்ணிய மேலீட்டினால் சைவசமயத்தை அடைவார்கள். சைவசமயத்தை அடைந்து சிவாகமத்தில் விதிக்கப்பட்ட சரியை கிரியை யோகங்களை விதிப்படி மெய்யன்போடு அநுட்டித்தவருக்குச் சிவபெருமான் ஞானாசாரியரை அதிட்டித்து வந்து சிவஞானம் வாயிலாக உண்மை முத்தியைக் கொடுத்து அருளுவார்.

..தொடரும்.

சென்ற இதழின் தொடர்ச்சி........

# சைவபோதம்

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், பி.ஏ. அவர்கள்)

## நான்காம் அதிகாரம் - ஆன்மா

**குறிப்பு:**

4. பிறவிகள் எப்போது உண்டோ அப்போது பிறவியிலே செய்யப்படும் வினையும் உண்டு. பிறவி அநாதியாதலால் கன்மமும் அநாதி. ஆகவே ஆன்மாவும், அதைப் பிணித்திருக்கும் மலங்களும், அதற்குரிய பிறவியும் தொடக்கமில்லாதவை

5.“தொடக்கமில்லாத பொருள் அழியமாட்டாது; ஆதலால் ஆணவம் அழிய மாட்டாதே; ஆகவே ஆன்மாவுக்கு முத்தி பெறப்படுவது எங்ஙனம்?” என்று ஒருவர் வினாவல் கூடும். ஆணவம் அழியா விட்டாலும், அதனுடைய வலிமை சிவசக்தியினுடைய வலிமையாற் கெடுக்கப்படுகின்றது. அதனால், ஆன்மா ஆணவப் பிணிப்பின் நீங்கி முத்தியின்பம் பெறுதல் உளதாகும் என்று அறிக.

6. “தொடக்கமில்லாததாகிய பிறவி எப்படி அழியும்?” என்றால், பிறவி ஒவ்வொன்றும் தொடக்கமுள்ளது அதனால் அது அழிவதாகும். தொடக்கமில்லாதது பிறவியின் பரம்பரையே; பரம்பரை பொருளன்று; ஆதலால் பிறவி அழியுந் தன்மையதே.

## ஐந்தாம் அதிகாரம் - பதி

(யசுர் வேதம் 40–8)

“கடவுள் சர்வவியாபராய், சுத்தசத்தாய், சர்வ சக்தி உடைய வராய், சர்வ வல்லமை உடையவராய், நிர்மலராய், பரிபூரணராய், சர்வஞ்ஞராய், பதியாய், நித்தியராய், சுவதந்திரராய் இருக்கிறார்.”

கடவுள் ஒருவரே, அவர் எல்லா உயிர்களுக்கும் உயிராக இருக்கிறார். எல்லா உலகங்களிலும் இருக்கிறார்; இவை எல்லாவற்றையும் கடந்து அப்பாலுமாய் இருக்கிறார். அவர் எங்கும் உள்ளவர். கடவுளே எல்லாவற்றையும் நடத்துபவர். ஆதலால் அவர் எல்லாவற்றையும் அறிபவர். எல்லாம் அறிதல் **சர்வஞ்ஞத்துவம்** எனப்படும். அவர் காலதத்துவத்தைக் கடந்தவர் ஆதலாலும், இயல்பாகவே மலத்தினின்றும் நீங்கியிருத்தலாலும் என்றும் அறிபவராவர். என்றும் அறிதல் **அநாதிபோதம்** எனப்படும். அவர் எதையும் விசாரித்தறியாமல் நேரே இயல்பாக அறிபவராதலால் இயற்கை உணர்வு உடையவர். இயற்கை உணர்வு **நிராமயான்மா**

எனப்படும். அவர் ஒரு காலமும் ஒரு விதமான குறையும் அல்லது தேவையும் இல்லாதவராதலால் நித்தியானந்தர் எனவும் நித்திய பரிபூரணர் எனவும் கூறப்படுவர். நித்திய பரிபூரணம் **திருப்தி** எனப்படும். அவர் பிறருடைய எண்ணப்படி நடவாதவராய்த் "தாமார்க்குங் குடியல்லாச் சங்கர" னாய் பேரருளால் மற்றைய பொருள்கள் எல்லாவற்றையும் தம் வசப்படுத்தி நடத்துதலால் **சுவதந்திரர்.**

இந்தப் பெரிய பூமியோ, இதிலும் பன்மடங்கு பெரிதான சூரியனோ, சூரியனிலும் பெரிய நட்சத்திரங்களோ இவையெல்லாம் அவரையே ஆதாரமாகக் கொண்டிருக்கின்றன. இந்த உலகங்கள் எல்லாம் அவராலே உண்டாக்கப்பட்டன; அவராலே நடை பெறுகின்றன. அவருடைய வல்லமைக்கு எல்லையில்லை. ஆதலால் அவர் **அநந்தசத்தியை** உடையவர். அவர் உயிர்கள் மேல் அளவில்லாத இரக்கம் உடையவர். ஆதலால் **அலுப்தசக்தி** உடையவர். அவர் மாயையினால் ஆக்கப்பட்ட தேகம் இல்லாதவராய், தமது சத்தியாற் சுத்தமான வடிவங் கொள்பவர். ஆதலால் அவருக்கு **விசுத்ததேகத்துவம்** உண்டு.

மேலே கூறிய எட்டுக் குணங்களுள் நிராமயான்மா விசுத்ததேகத்துவம் என்னும் இரண்டையும் மற்றவற்றுள் அடக்கிக் கடவுளுக்குரிய குணங்களை ஆறாக்கிச் சொல்வதுமுண்டு. இந்த ஆறு குணங்களும் சுத்த சட்குணம் எனப்படும். இவற்றுள் சுவதந்திரம் அநந்தசத்தி ஆகிய இரண்டையும் **சத்** என்றும், சர்வஞ்ஞத்துவம் அநாதிபோதம் ஆகிய இரண்டையும் சித் என்றும், திருப்தி அலுப்தசக்தி ஆகிய இரண்டையும் ஆனந்தம் என்றும் சுருக்கி மூன்று குணங்களாகச் சொல்வதும் உண்டு. இந்த மூன்றும் சச்சிதானந்த மென்று தொடுத்துச் சொல்லப்படும்.

உலகத்திலே நாம் அறிகிற பொருள்களில் மரம் கல் முதலியவை ரூபமுள்ளன. காற்று ஆகாயம் முதலியன ரூபமில்லாதன (அரூபம்). இப்படியான பூதப் பொருள்களுக்கு மாத்திரம் ரூபம், அரூபம் என்ற பேதம் சொல்லத் தகும். கடவுள் இவைகளைப் போன்ற பொருளல்லர். அவருக்கு ரூபம், அரூபம் என்ற பேதம் இல்லை. ஆனபடியால் அவர் ரூபியுமல்லர் அரூபியுமல்லர்; அவர் ரூபியோ அரூபியோ என்று கேட்பது இராமயணப் பிரசங்கம் ஒரு ஆட்சுமை இருக்குமோ? இராதோ? என்று கேட்பது போலாகும்.

இனி இவ்வளவு நுட்பமாகப் பாராது சொல்லுகில், அவர் அரூபி என்று சொல்லலாம். அவர் இன்ன குணமுள்ளவர் இன்ன விதமானவரென்று எங்கள் பொறிகளினால் ஆவது புத்தியனால் ஆவது அறிந்து கொள்ளல் இயலாது. அவர் நமக்குச் செய்யும் நன்மைகளால் நாம் அவருடைய தன்மையை ஒருவாறு அறியலாம். அவருடைய திருவருள் ஞானத்தால் மாத்திரம் அவர் இப்படிப்பட்டவரென்று உள்ளபடியே நாம் அறியலாம்.

தேவாரம்

திருச்சிற்றம்பலம்

மைப்படிந்த கண்ணாளுந் தானுங் கச்சி
மயானத்தான் வார்சடையான் என்னி னல்லான்
ஒப்புடையன் அல்லன் ஒருவன் அல்லன்
ஓரூரன் அல்லன் ஒருவமன் இல்லி
அப்படியும் அந்நிறமும் அவ்வண்ணமும் அவனருளே
கண்ணாகக் காணின் அல்லால்
இப்படியன் இந்நிறத்தென் இவ்வண்ணத்தன் இவனிறைவன்
என்றெழுதிக் காட்டொ ணாதே.

திருச்சிற்றம்பலம்

அவருடைய திருவருளை நாம் பெற வேண்டுமானால் அவரிடத்தே இடையறாத அன்புள்ளவர்களாய் இருத்தல் வேண்டும். ‘‘பத்தி வலையிற் படுவோன் காண்க’’ என்றார் மாணிக்கவாசக சுவாமிகள். நமக்கு இப்போதுள்ள பத்தியை வளர்த்துக் கொண்டு வந்தால் நாம் அவரை அறியலாம்.

தொடரும்



டன்டாஸ் பல் மருத்துவமனை
போவியாட் பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்
**Dr. Vanathy Jeevakumar**
**டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்**


*Family and General Dentistry*

**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்

* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction

Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905- 281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont. ,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905 -846-9929**



சுந்தரமூர்த்தி நாயனார்
திருவாரூர் தேவாசிரியன் மண்டபத்தில்
திருத்தொண்டத்தொகை அருளல்